# FAMOUS MORAL STORIES

Indian Vedic School
Language of the Gods

BY INDIAN VEDIC SCHOOL

TAMIL VOL - 13



























# INDEX


| | |
|---|---|
| RIGHT FULLY WHOSE | 1-10 |
| TRUE WISDOM | 11-18 |
| TRUE JUSTICE | 19-29 |
| SINGER | 30-37 |
| SMARTNESS | 38-42 |
| TRICKY HERB | 43-51 |
| SOLUTION | 52-59 |
| THE MAGIC BROOM | 60-66 |
| THE MIGHTY RIVER | 67-74 |


யாருக்கு உரிமை


நந்து மற்றும் சந்து இருவரும் சிறுவயது நண்பர்கள்; துன்பப்படும்போது ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு வாழ்ந்து வந்தனர்.
நந்து சந்து இருவருக்கும் திருமணமாயிற்று. அவர்கள நட்பிற்கு களங்கமில்லாமல் தங்களது குடும்பத்தையும் கவனித்து வந்தனர்.
ஒரு வருடம் கடுமையான வறட்சி ஏற்பட்டது. இதனால் கிராமவாசிகள் தங்களது நிலத்தில் சரியான விளை ச்சலைக் காணமுடியவில்லை. எங்குபார்த்தாலும் பஞ்சம் தலை விரித்து ஆடியது.
சந்து நாம் எவ்வாறு இந்த வருடத்தை சமாளிக்கப் போகிறோம்?
நம்மால் கிராமத்தில் யாரிடமும் கடன் வாங்க முடியாது. எல்லோருடைய நிலைமையும் இதுதான்.



ஒரு நாள் கையில் கடிதத்துடன் ஒரு மனிதர் நந்து வீட்டிற்கு வந்தார்.
சார், இது உங்களுக்குதான்
நந்து அந்த கடிதத்தை வாசிக்கிறான்.
ஓ!! உங்களுக்கு மிக்க நன்றி. எனது மாமாவிடம் எனது வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள். நான் நாளை அங்கு இருப்பேன்.
எனது மாமா மிகுந்த தயாள குணமுடையவர். எனது நிலையைக் கண்டு அவர் தனது நிலத்தில் உள்ள மரக்கன்றுகளை சேகரித்துக் கொள்ளுமாறு கூறியுள்ளார்.


ஓ!! கடவுள் அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஆசிகள் வழங்கட்டும்.
நான் நாளை சீக்கிரமே கிளம்பிச் செல்கிறேன். அப்போதுதான் என்னால் அன்றே திரும்பி வர முடியும்.
நந்து தனது மாமாவின் கிராமத்திற்குச் செல்லக்கூடிய தனது திட்டத்தை சந்துவின் வீட்டிற்குச் சென்று தெரிவிக்கிறான்.
ரொம்ப நல்லது, நீ தவறாக எண்ணவில்லை என்றால் நானும் உன்னுடன் வரலாமா? அவரிடம் எனக்கும் சில மரக்கன்றுகளைத் தருமாறு வேண்டுவேன்.
சரி, ஒன்றும் பிரச்சினையில்லை.
நன்றி நந்து.
அடுத்தநாள் காலை இருவரும் மாமாவின் கிராமத்தினை அடைந்தனர்.


வணக்கம் மாமா, இது எனது ஆருயிர் நண்பன் சந்து.
வாருங்கள், இது யார்?
நீங்கள் இவனுக்கும் சில மரக்கன்றுகளைக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.
மருமகனே, என்னிடம் இல்லை, ஆனால் வேறு யாரிடமாவது கேட்டுப் பார்க்கிறேன்.
அனைத்து அண்டை வீட்டுக்காரர்கள் மற்றும் நண்பர்களிடம் கேட்டபிறகு வீட்டிற்குத் திரும்பினார்.


பிள்ளைகளே, என்னை மன்னியுங்கள், யாரிடமும் மரக்கன்றுகள் இல்லை.
பரவாயில்லை மாமா, உங்களது உதவிக்கு நன்றி.
இருவரும் தங்களது கிராமத்திற்கு சென்றனர்.
வரும்வழியில் சந்து மிகவும் சோகமாக இருந்தான்.
சந்து, கவலைப்படாதே நாம் மரக்கன்றுகளைப் பிரித்துக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்து கொள்வோம்.
ஓ!! நல்லது, நாம் அவ்வாறே செய்துகொள்ளலாம்.
அவர்கள் தங்களது மரக்கன்றுகளைப் பிரித்துக் கொண்டு தங்களது வயலில் நட்டனர்.


சில மாதங்கள் கழித்து அவர்களது வயல் அறுவடைக்கு வந்தது.
நந்துவின் பயிர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.
அடக்கடவுளே என்ன சோதனை.
நன்றி கடவுளே நான் எனது பயிரை இரண்டு நாள் முன்னதாகத்தான் அறுவடை செய்தேன்.
சந்து, நீ எனக்கு 10 மூட்டை அரிசி கடனாக அளித்தால், நான் அடுத்த வருடம் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.
ஹா...ஹா...ஹா... எனக்கு உனக்கு கொடுக்கும் அளவிற்கு இலாபம் கிடைக்கவில்லை.
நந்து மிகுந்த வருத்தம் கொண்டான்.
சந்து, நான் இதனை உன்னிடம் எதிர்பார்க்கவில்லை. உனது கஷ்ட காலத்தில் நான் உனக்கு உதவியுள்ளேன் என்பதை நினைவுகொள்.
சரி, நான் நீ கொடுத்ததற்குச் சமமான அளவு பயிர்களை அளிக்கிறேன்.


நந்து தனது வீட்டிற்குத் திரும்பி இதனைத் தனது மனைவியிடம் விவரிக்கிறான்.
அன்பே, நீங்கள் அவரிடம் பயிர்களைக் கொடுத்தபோது அவரது வயலில் இருந்து வரும் இலாபத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளீர்கள். இதனால் அவர் உங்களுக்கு இலாபத்தைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.
அடுத்தநாள், நந்து கிராமத் தலைவரிடம் சென்று புகார் தெரிவிக்கிறான்.
கிராமத் தலைவர் அவர்கள் இருவரையும் அழைக்கிறார்.
சந்து, நந்துவின் புகார் பற்றி என்ன கூற விரும்புகிறாய்?
ஐயா எனக்கு இந்த வருடம் இலாபம் எதுவும் கிடைக்கவில்லை, இதனால் நான் சந்துவுக்கு எதுவும் கொடுக்க முடியாது.
கிராமத் தலைவர் சந்துவின் கூற்றின் உண்மையை விசாரித்த பின்னர் அவன் நல்ல இலாபத்தை ஈட்டியதாக அறிந்து கொண்டார்.


சரி, நான் உழைத்து இலாபத்தை ஈட்டியுள்ளேன். நான் பயிர்களுக்கான விலையை அளிக்கிறேன்.
நான் இவனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும்.
சரி, அவன் கொடுத்த பயிர்களைத் திருப்பி அளித்துவிடு.
அதனை எவ்வாறு செய்வது.
நந்து உனக்கு பயிர்களைக் கொடுத்துள்ளான் இதனால் அவனுக்கு நீ திருப்பி கொடுக்கவேண்டும்.
என்னால் இந்த வருடம் கொடுக்க முடியாது. ஆனால் அடுத்த வருடம் கொடுக்க முடியும்.
தலைவரின் வாதத்தை நந்து புரிந்துகொண்டான்...
நான் கொடுத்ததைத் திருப்பிக் கொடு.


இருவரும் அவர்களது தரப்பில் வாதம் செய்தனர்.
நந்து, சந்து, இருவரும் அமைதியாக எனது தீர்ப்பைக் கேளுங்கள்.
பயிர்கள் நந்துவினுடையது ஆனால் நிலம் சந்துவினுடையது. நந்து சந்துவைப் பயன்படுத்தி அவனது நிலத்தில் விளைச்சலை ஏற்படுத்திக் கொண்டான். சந்துவிடம் பயிர்கள் இல்லாததால் நந்துவை அவனது நிலத்தில் அறுவடை செய்ய அனுமதித்திருக்கிறான்.
நந்து சந்துவின் நிலத்தைப் பயன்படுத்திக் கொண்டதால், அவன் சந்துவுக்கு நேர்ந்த செலவுகளை ஏற்க வேண்டும். சந்து தனது முழு இலாபத்தையும் நந்துவிற்கு அளிக்க வேண்டும்.
சந்து தீர்ப்பினைக் கேட்டு அதிர்ச்சியானான்.
நந்து, இந்த விஷயத்தை நாமே தீர்த்துக் கொண்டிருந்திருக்கலாம். இந்த கிராமத்தலைவர் நமது நட்பினைப் பிரிக்க முயல்கிறார். அமைதியாக நாமே பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.
நான் உன்னுடன் எந்த உறவும் கொள்ள விரும்பவில்லை. நான் கிராமத் தலைவரின் தீர்ப்பின்படியே செல்ல விரும்புகிறேன்.
சந்துவின் முட்டாள்தனத்தால் அவனது அனைத்து இலாபத்தையும் இழந்தான், நந்துவின் சிறந்த நட்பினையும் இழந்தான்.
முற்றிற்று

# உண்மையான ஞானம்




அரசர் மஹிபாலின் பிரதான ஆலோசகர் இறந்தார்.
அரசர் புதிய ஆலோசகரின் நியமனத்தை அறிவிக்கிறார்.
அரசர் அனைவரிடமும் பல கேள்விகளைக் கேட்டு சோதித்தார்.
அரசர் ஹேமந்த், பல்வந்த் மற்றும் மஹந்த் என்ற மூன்று அறிவாளி மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார்.
நான் எனது ஆலோசகர் பழைய ஆலோசகர் விவேக் போன்று திறமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இவர்கள் மூவருக்கும் ஒரு கடினமான பணியைக் கொடுத்து சோதிக்க வேண்டும்.


நான் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கொல்லப்பட்ட ஒரு மருத்துவரை பற்றி உங்களுக்கு கூறுகிறேன். கவனமாகக் கேட்கவும்.
எனது தந்தை அரசர் விக்ரமபால் ஆட்சி செய்துகொண்டிருந்த நேரத்தில், பஞ்சம் ஏற்பட்டது. மழையே இல்லாமல் பசும் பயிர்கள் அனைத்தும் வறண்டு போயின.
பகல் நேரத்தில் கூட திருட்டும் வழிப்பறியும் அதிகமாகியது. அவர் பெரும் முயற்சி எடுத்தும் அதனைத் தடுக்க முடியவில்லை. நாளுக்கு நாள் குற்றம் பெருகிக்கொண்டே சென்றது.



ஒருநாள் அரசவைக்கு ஒரு மருத்துவர் வந்தார்.
அரசே, நான் ஒரு சின்ன மருத்துவர். நான் ஒரு சிறப்பான மருந்தைக் கண்டுபிடித்துள்ளேன். அதனை உண்டால் யாருக்குமே பசி ஏற்படாது. மேலும் அதனை உருவாக்க செலவும் அதிகம் ஆகாது.
உனது கண்டுபிடிப்பினால் எனக்கு மிக்க மகிழ்ச்சி. மந்திரியே, மருந்து செய்வதற்குத் தேவையான அனைத்து பொருட்களையும் அவருக்கு அளியுங்கள்.
மருந்து கிட்டத்தட்ட முடிவடைந்திருக்கும் சமயம் எனது தந்தை தனிப்பட்ட முறையில் மருத்துவர் இருக்கும் இடத்திற்குச் சென்றார்.
அரசே, இந்த நாய் கடந்த இரு வாரமாக சாப்பிடவே இல்லை. இந்த மருந்தினால்தான் உயிர் வாழ்கிறது.
அடுத்தநாள், கணபதி வர்மாவின் உடல் கிணற்றின் அருகே கண்டறியப்பட்டது.


இது எவ்வாறு நடந்தது? மருத்துவர் விபத்தினால் இறந்தாரா அல்லது கொல்லப்பட்டாரா? நீங்கள்தான் இதனைக் கண்டுபிடிக்க வேண்டும்.
நீங்கள்தான் இந்த உண்மையைக் கண்டறிந்து நிரூபிக்க வேண்டும், நான் உங்களுக்கு உதவுவதற்காக மூன்று பெயர்களைக் கூறுகிறேன்.
ஒருவர் தலைமை மருத்துவர் தன்வீர் ஆச்சார்யா, இரண்டாவது கணபதி வர்மாவின் சகோதரர் நரேந்திர வர்மா, மூன்றாவது என் தந்தை அரசர் விக்ரம்பால். இவர்களில் ஒருவர்தான் கணபதி வர்மாவைக் கொன்றுள்ளனர்.
இந்த புதிரை யார் தீர்க்கின்றார்களோ அவர்தான் எனது தலைமை ஆலோசகர்.


அரசே, தன்வீர் ஆச்சார்யாதான் கொலையாளி. ஒருவேளை மருந்து கண்டுபிடிக்கப்பட்டால் அவர் தனது பேரையும் புகழையும் இழக்க நேரிடும். எனவே அவர்தான் கொன்றிருப்பார்.
உனது கருத்து என்ன பல்வந்த்?
எனது கருத்தின்படி கணபதி வர்மாவின் சகோதரர் நரேந்திர வர்மாதான் கொலையாளி. அவர்களது முன்னோர் சொத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தனது சகோதருடன் சண்டையிட்டு அவரைக் கொன்று கிணற்றடியில் வீசி இருப்பார்.
உனது கருத்து என்ன மஹந்த்?


அரசே, நீங்கள் 3 பெயர்களைக் கூறினீர்கள். அவர்களில் தன்வீரோ நரேந்திர வர்மாவோ கொலையாளி இல்லை.
உங்களது தந்தை தொடக்கத்தில் கணபதி வர்மாவின் பசியைப் போக்கி வறுமையை ஒழிப்பதற்காக மருந்து தயாரிக்கும் பரிந்துரையை ஏற்றிருக்கிறார்.
ஆனால் பின்பு அவர் பசியே இல்லை என்றால், உழைப்பே இருக்காது, யாருமே வாழ்க்கைக்காக கடினமாக உழைக்க மாட்டர். வாழ்க்கையில் அன்பும் மதிப்பும் இல்லாமலே போய்விடும்.
எனவே மருந்தின் அபாயத்தை நினைத்து அவர் கணபதி வர்மாவைக் கொன்றிருக்கிறார் என்பது எனது கருத்து.


அருமை, உனது யோசனை சரியானது. எனது தந்தைதான் கணபதி வர்மாவைக் கொன்றார் என்பதை நான் அறிவேன். ஆனால் நீ அதற்கான விளக்கத்தை அளித்த விதம் உன்னை எனது ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கச் செய்தது.


இன்றிலிருந்து மஹந்த் எனது பிரதான ஆலோசகர்.
முற்றிற்று


உண்மையான நீதி


அரசர் விக்ரம் உஜ்ஜயினி நாட்டை ஆண்டு வந்தார். அவர் ஒரு லட்சியமான மற்றும் தைரியமான மனிதர்.
அவர் அண்டை நாடுளைக் கைப்பற்றி அவற்றை ஆண்டு வந்தார். சிலர் தாமாகவே வந்து சரணடைந்தனர்.
அதேசமயம் அரசர் சத்யகீர்த்தி அவ்னிகா ராஜ்ஜியத்தை ஆண்டு வந்தார். அவரது நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருந்தனர். அவர் ஒரு நேர்மையான தயாளகுணமுள்ள ஒரு அரசராக அறியப்பட்டார்.
அரசர் விக்ரம் அவரது வீரர்களை சத்யகீர்த்தியிடம் அனுப்புகிறார்.
வணக்கம் அரசே, அரசர் விக்ரம் உங்களுக்கு ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்.


நான் எனது ராஜ்ஜியத்தை ஒரு மனிதாபிமானமில்லாத கொடூர மனிதரிடம் ஒப்படைக்க மாட்டேன் என்று அவரிடம் போய் கூறுங்கள்.
உனது மன்னர் இரத்தம் சிந்தவேண்டும் என்றால், போருக்குத் தயாராக இருக்கச் சொல்லுங்கள்.
அரசர் விக்ரம் அவ்னிகாவைத் தாக்கத் துவங்கினார். போர் தொடங்கியது.
ஓ....


சத்யகீர்த்தியின் குதிரைக்கு அடிபட்டது.
அந்த சமயம் பார்த்து அரசர் விக்ரம் சத்யகீர்த்தியைத் தாக்கி அவரைக் கைது செய்தார்.
அரசர் சத்யகீர்த்தி சிறையில் அடைக்கப்பட்டார். ராஜ்ஜியம் சரணடைந்தது.
வாருங்கள்
நாம் நமது ராஜ்ஜியத்திற்காக போர் புரியச் செல்லலாம்.


நான்தான் ராணி ருத்ரவீணா; நான் இப்போது மன்னரின் இடத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். நான் எனது மக்களுக்காகப் போர் புரிய வந்துள்ளேன்.
நான் பெண்களைத் தாக்க மாட்டேன். அவ்வாறு நான் செய்தால் நான் எனது குருவுக்கு அளித்த வாக்கை மீறுவது போலாகிவிடும்.
அவ்வாறானால் தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள்
சண்டையிடாமல், நான் எவ்வாறு இதனைச் செய்யமுடியும்?
அரசே, என்னை சண்டையிட அனுமதியுங்கள்.


ராணி ருத்ரவீணா தளபதியுடன் சண்டையிட்டு அவரை வீழ்த்தினார்.
இப்போது உங்களது தோல்வியை ஒப்புக்கொள்ளுங்கள்.
அரசர் விக்ரமிற்கு தனது தோல்வியை ஒப்புக்கொள்ள மனமில்லை.
உனக்கு இன்னும் எனது வெற்றியை ஏற்றுக்கொள்ள இயலவில்லை, நீ ஏன் அரசர் சத்யகீர்த்தியிடம் சென்று நீதி கேட்கக் கூடாது.


அவர்கள் சிறைக்குச் சென்று அரசர் சத்யகீர்த்தியைச் சந்தித்து அவரது கருத்தைக் கேட்டனர்.
ராஜ்ஜியத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரும் தங்களது நாட்டைப் பற்றிய நலனில் அக்கறை கொள்ளலாம். எனவே ராணி செய்தது சரியே.


ராணி ருத்ரவீணாவுடன் போர் செய்த தளபதி அரசர் விக்ரமிற்கு சமமான வலிமை கொண்டவர்.
எனவே மந்திரி தோல்வியடைந்தது மன்னர் தோல்வியடைந்ததற்கு ஒப்பாகவே கருதப்படும். இதனால் ருத்ரவீணா ராஜ்ஜியத்தை வெற்றிகொண்டுள்ளார்.
ஆனால் ராணி ருத்ரவீணா தான் மன்னரின் இடத்தில் இருப்பதாகக் கூறியது தவறான ஒன்று.
அரசர் உயிருடன் இருக்கும் வரையில் யாருமே அவரது இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. ஆனால் நீ அவரது இடத்தில் வெற்றி பெற்றுள்ளதால் உனது வெற்றியை சரி என்று கூறமுடியாது..


இந்த தீர்ப்பைக் கேட்டு அரசர் விக்ரம் மகிழ்ச்சியடைந்தார்.
அரசர் சத்யகீர்த்தி உங்களது தீர்ப்பிற்கு நான் அடிபணிகிறேன்.
எனது செயலை மன்னியுங்கள்.அரசர் சத்யகீர்த்தி நான் உங்களை விடுதலை செய்கிறேன். உங்களது ராஜ்ஜியத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.
அரசர் விக்ரம், என்னை விடுவித்ததற்கு நன்றி. ஆனால் என்னால் எனது ராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.
என்னை மன்னித்துவிடுங்கள், எனது சுயமரியாதை என்னை தடுக்கிறது.


அரசர் சத்யகீர்த்தி ராணியுடன் அந்த இடத்தை விட்டுச் சென்றார்.
அரசே, நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் இல்லாமல் நாங்கள் இந்த ராஜ்ஜியத்தில் வாழ முடியாது. நாங்களும் உங்களுடன் வருகிறோம்.
அரசர் சத்யகீர்த்தி, நில்லுங்கள். நான் போரில் ஜெயித்தது தற்காலிகமானது தான். ஆனால் மக்களின் மனதை நீங்கள் நிரந்தரமாக வென்றுவிட்டீர்கள். நீங்கள் தான் உண்மையான வெற்றியாளர்.
அரசர் விக்ரம் அவரது படையுடன் திரும்பிச் சென்றார்.


அவ்னிகா மக்கள் அவரது மன்னரை தங்கள்
நாட்டிலேயே இருக்குமாறு வலியுறுத்தினர்.


அரசர் விக்ரம் தான் கைப்பற்றிய அனைத்து ராஜ்ஜியஙளையும் அந்தந்த
மன்னர்களிடம் ஒப்படைத்தார். அவர் சத்யகீர்த்தியின் கொள்கைகளைப்
பின்பற்றினார். அதன் பின்னர் அவர் அனைவராலும் மதிக்கப்பட்டார்.
முற்றிற்று


பாடகர்



தண்டகாரண்யம் காட்டில்....
வாழ்த்துக்கள் குயிலே.. நான் உன்னை அரசவை பாடகியாக நியமிக்கிறேன்.
இந்த முடிவைக் கேட்டு அனைவருமே மகிழ்ந்தனர்.
மன்னா, நான் மிகவும் மகிழ்கிறேன் மிக்க நன்றி.
நாங்கள் இந்த முடிவை ஏற்க மறுக்கிறோம், இது சரியல்ல.
சிங்க அரசர் சற்றே சிந்தித்திருக்கலாம், எந்தவகையில் அவர்கள் எங்களை விட உயர்ந்தவர்கள்.
ஆம், நாங்கள் அவர்களைப் போலத்தான் இருக்கிறோம். இன்னும் அவர்களை விடக் கடுமையாக உழைக்கிறோம்.


இதனை எதிர்ப்பதற்காக காட்டில் இருக்கும் அனைத்து காகங்களும் போராட்டத்தில் இறங்கின. இதனால் காகங்கள் குப்பைகளை சுத்தம் செய்வதை நிறுத்தின.
STRIKE
காகங்களின் போராட்டம் காரணமாக காடு முழுவதும் குப்பையும் கூளமுமாகக் காட்சியளித்தது.
STRIKE
காகங்களின் போராட்டம் பற்றி சிங்கத்திற்கு தெரிய வந்து காகங்களை அழைத்தது.
ஏன் குப்பைகளை சுத்தம் செய்யவில்லை?


ஐயா, நாங்கள் குயிலை அரசவைப் பாடகியாக நியமித்ததன் காரணமாகப் போராட்டம் நடத்துகிறோம். ஏன் இந்த பாரபட்சம்? நாங்களும் அதே இனம்தான்.
உண்மையில் நாங்கள் குயில்களை விட உயர்ந்தவர்கள், அவர்களை விடக் கடுமையாக உழைக்கிறோம். மேலும் நாங்கள் தான் அவர்களின் குழந்தைகளையும் கவனித்துக் கொள்கிறோம்.
ஐயா, நாங்கள் இதுவரையும் பொறுமையாக இருந்தோம்.ஆனால் இனி முடியாது. எங்களுக்கு நியாயம் வேண்டும்.
ஆமாம்...
STRIKE
ஆமாம்....
ஆமாம்....
சரி, இரண்டு நாட்கள் கழித்து நாம் பாட்டுப் பாடும் போட்டி ஒன்றை நடத்துவோம். வெற்றியாளர் பாடகராக நியமிக்கப்படுவார். அதுவரை அனைவரும் தங்களது பணிக்குத் திரும்புங்கள்.


குரங்கினை காடு முழுவதும் இதனை அறிவிக்குமாறு சிங்கம் கேட்டுக்கொண்டது.
காகங்களின் வீரத்தைக் கண்டு காட்டில் இருந்த எல்லா மிருகங்களும் ஆச்சரியம் கொண்டன.
நாம் போட்டியைத் துவங்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை.
நிபந்தனை என்னவென்றால் அவர்கள் பாடும்பொழுது யாரும் தங்களின் தலையை அசைக்கக் கூடாது. இல்லையெனில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.


அனைவரும் தயாராயினர். குயில் போட்டியைத் துவங்கியது.
இயற்கையிலேயே குயிலின் குரல் இனிமையாக இருப்பதால் அனைவரும் ரசித்து தலையை அசைக்கத் துவங்கினர்.
சிங்க அரசரும் பிற விலங்குகளும் காகங்கள் உட்பட அனைவரும் பாடலை ரசிப்பதைக் கண்டனர்.
இப்போது காகம் பாடும்.


அனைவரும் இசையில்
இருந்து வெளியே வந்தனர்.
காகம் பாடத் துவங்கியது.
சிறிது நேரம் கழித்து காகம்
பாடுவதைக் கேட்டு அனைவருமே
பொறுமை இழந்து போயினர். பறவைகள்
பறந்து போயின. சில விலங்குகள்
அங்கிருந்து செல்ல
ஆரம்பித்தன.
காகம் பாடுவதை நிறுத்தியது.
சரி, அனைவரும் இங்கே
பாருங்கள். எனது
நிபந்தனையையும் மீறி குயில்
பாடும்போது அனைவரின்
தலைகளும் அசைந்தன.
அப்படியென்றால் அவர்கள்
அனைவருமே தங்களை மறந்து
இசையை ரசித்தனர்.அதுதான்
நல்ல இசையின் அடையாளம்.


குயிலும் காகமும் பார்ப்பதற்கு
ஒன்றாக இருந்தாலும் பாட்டுப் பாடுதல்
என்று வரும்போது குயிலை யாருமே
வெல்ல முடியாது.
காகங்கள் அதனைப் பற்றித்
தவறாக எண்ண வேண்டியதில்லை.
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு
திறமை உள்ளது. காகத்திற்கு
கூட குயிலிடம் இல்லாத ஒரு
திறமை இருக்கலாம்.
எனவே, குயில்தான்
அரசவைப் பாடகர் என்று
அதிகாரப்பூர்வமாக
அறிவிக்கப்படுகிறது.
காகங்கள் தவறை உணர்ந்து
கொண்டு பறந்து சென்றன.


சாமர்த்தியம்



ஒரு நாள் ஒரு குரங்கு திரு. ஜோஜோவின் தோட்டத்திற்குள் நுழைந்து விட்டது.
சூ...சூ... வெளியே போ.
அய்யோ... நான் எங்கு சென்று ஒளிந்துகொள்வது?
குரங்கு எந்த செடிகளையும் மரங்களையும் தொந்தரவு செய்யாது ஒளிந்து கொண்டது, இதனால் திரு ஜோஜோ நினைத்தார்....
ஹையா... நான் எளிதாக குரங்கை தோட்டத்திலிருந்து வெளியேற்றி விட்டேன்.
ஒரு நாள் திரு ஜோஜோவை சந்திப்பதற்காக விராஃப் நகரத்திலிருந்து வந்திருந்தான். அவன் ரோஸைக் கண்டு அவளை திருமணம் செய்ய விரும்பினான்.
ஹலோ ரோஸ்!!
ஹலோ!
இருவரும் பேசத் துவங்கினர்.


இருவரும் தோட்டத்தில் காலார நடந்து சென்றனர்.
உனக்குத் தெரியுமா எனக்கு குரங்கின் மொழி தெரியும்.
அப்படியா! அவ்வாறானால் நீங்கள் அந்த குரங்குகள் என்ன பேசுகிறது என்று மொழிபெயர்க்க முடியுமா?
ரோஸ் மரத்தின் மீது இருந்த இரண்டு குரங்கினைக் காண்பித்தாள்..
ஏன் முடியாது?
அதில் ஒன்று பெண் குரங்கு...
விராலீப் மொழிபெயர்க்கத் தொடங்கினான்.
நீ அழகாக இல்லையே. எவ்வாறு நான் உன்னைத் திருமணம் செய்துகொள்ள முடியும்?
ஆஹா நீ மிக அழகாக இருக்கிறாய்! நான் உன்னை மணக்க விரும்புகிறேன்


ஹா...ஹா..ஹா...
ஏன் சிரிக்கிறாய்? நான் ஆண் குரங்கிற்காக வருத்தப்படுகிறேன்.
ஏன்?
ஏனெனில் அவள் அவனை நிராகரித்து விட்டாள். நீ அவ்வாறு செய்யவில்லை என்று மகிழ்கிறேன். இல்லையென்றால் அந்த குரங்கின் நிலைமைதான் எனது நிலைமையும்.
எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது என்று நீ நினைத்தாயா? நீயும் அந்த குரங்கு போல்தான் இருக்கிறாய்... ஹா...ஹா..ஹா...
திடீரென்று பெண் குரங்கு சென்று ஆண் குரங்கின் அருகில் சென்று அமர்ந்து கொண்டது.
கிரீச்... கிரீச்... கிரீச்


ஆண் குரங்கு ரோஸை நோக்கிச் சென்று அவளது பாதத்தை தொட்டது.
ஆஆஆஆ.. உதவி செய்யுங்கள்!
இரண்டு குரங்குகளும் ஒன்றுக்கொன்று கைகளைப் பற்றிக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே சென்றது.
என்ன ஆயிற்று?
அவைகளுக்கு நமது மொழி புரியும் என்று நான் நினைக்கிறேன்.
என்ன கூறுகிறாய்?
நீ நான் அந்த குரங்கைப் போல இருக்கிறேன் என்று கூறியவுடன் அந்த பெண் குரங்கு என்னைப் பார்த்துவிட்டு, அந்த ஆண் குரங்கை திருமணம் செய்வதற்கு ஒப்புக்கொண்டது. அதனால்தான் அது வந்து உனது காலைத் தொட்டது.
ஹ்ம்ம்ம்.. ரொம்ப சாமர்த்தியமாக அந்தக் குரங்குகளை வைத்து ஒரு கதையைப் புனைந்து விட்டாய். உன்னைப் போன்ற ஒரு புத்திசாலியை மணக்க எனக்கு சம்மதமே
அவ்வாறானால் நீ கூறியதைக் கொஞ்சம் திருத்திக் கொள்ளவேண்டும்.
எப்படி!
நான் புத்திசாலி மட்டுமல்ல பார்ப்பதற்கும் அழகாக இருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.
ஆமாம். நான் ஒப்புக்கொள்கிறேன்.
முற்றிற்று

# தந்திர மூலிகை




KINGDOM OF MAGADHA
WAS RULED BY
KING VIJAY VARMA, FAMED FOR HIS WISDOM ,
VALOR AND MAGNANIMITY...
MANY INDIAN KINGS
LOOKED UPON HIM AS AN IDOL.
KING VIJAY VARMA HAD A SON NAMED
PRINCE VEER VERMA,
THE KING WANTED HIS SON
TO LEARN THE ART OF
ARCHERY AND SWORD FIGHTING.
PRINCE VEER VARMA WAS TRAINED BY
MASTER PRASENA
WHO IS A
GREAT EXPERT IN THE FIELD.


மன்னா, நமது இளவரசர் தனது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான தருணம் வந்துவிட்டது. நாம் அவரை குரு சமீரிடம் அனுப்பலாம். அது நமது காட்டின் அருகில்தான் இருக்கிறது.
சரி.. நல்ல யோசனைதான்.
மன்னர் இளவரசரை குருகுலத்திற்கு அனுப்பினார்.
நான் வில்வித்தை, வாள் சண்டை ஆகியவற்றில் தேர்ச்சி அடைந்துள்ளேன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியுமா. இதில் ஏதேனும் உங்களுக்கு சந்தேகம் இருக்கிறதா.
நீ மாளிகையில் கற்றுக்கொண்டது மட்டும் போதாது. நீ இங்கு உன்னுடைய திறமைகளை பட்டை தீட்டிக்கொள்ள வேண்டும்.
இரண்டு பையன்கள் அவரை வீழ்த்த இளவரசர் ஆச்சரியம் கொண்டான்.
எங்களது மாளிகையில் இந்த குருகுலத்தில் பயிற்றுவிக்கப்பட்ட திறமையான மக்கள் இருக்கின்றனர். நான் அவர்கள் அனைவரையும் வென்றிருக்கிறேன். உங்களை என்னால் எவ்வாறு வீழ்த்தமுடியவில்லை என்று தெரியவில்லை. நீங்கள் போருக்குச் சென்றதில்லை ஆனால் அவர்கள் போருக்குச் சென்றிருக்கின்றனர்.


ஹா...ஹா... நீ அங்கு ஒரு இளவரசர். யாருக்கும் உன்னை வீழ்த்துவதற்கு தைரியம் கிடையாது. உனக்கு கட்டாயமாக பயிற்சி வேண்டும்.
இளவரசர் அவனது குறைந்த திறமை காரணமாக அவனால் எவரையும் வீழ்த்த முடியாது என்ற உண்மை அறிந்து வருத்தம் கொண்டான். இந்த சம்பவத்தின் பின்னர் அவன் அவமானப்பட்டு குருகுலத்திலேயே தங்கினான்.
இளவரசே, வருத்தப்படாதே. உன்னிடம் திறமைகள் இருக்கின்றன. ஆனால் பயிற்சி தேவை. என்னை கேள்... நீ சிறந்தவனாகலாம்.
என்னை மன்னியுங்கள் குருவே... நான் தன்னம்பிக்கை இழந்துவிட்டேன். என்னால் எவரையும் போரில் எதிர்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை. என்னைச் செல்லவிடுங்கள்.


மன்னர் விஜய வர்மர், இந்த சம்பவத்தைக் கேட்டு வருத்தம் கொள்கிறார். மகத நாட்டினை ஆளவேண்டிய இளவரசர் போருக்குப் பயந்து தன்னம்பிக்கை இழந்ததை எண்ணி வருத்தமடைந்தார். இத்தகைய மன்னரை மக்கள் மதிக்கமாட்டர்.
அரசரும் அவருடன் சேர்ந்து சில பண்டிதர்களும் இளவரசரை சமாதானப்படுத்த முயன்றனர். ஆனால் எதுவும் நடக்கவில்லை.
குரு ப்ரசன்னா அவரது பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பினார்.
உங்களது அறிவுரையைக் கேட்டு இளவரசரை குருகுலத்திற்கு அனுப்பினோம். ஆனால் அவனுக்கு முன்னர் இருந்த தன்னம்பிக்கை போய்விட்டது.
நடந்த சம்பவத்தை அரசர் குருவிற்கு விவரிக்கிறார்.


கவலைப்படாதீர்கள் மன்னா! இளவரசரை அழையுங்கள். நான் பேச விரும்புகிறேன்.
குருவே, நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள். என்னிடம் சிறப்பான திறமைகள் இருக்கின்றன என்று கூறினீர்கள். உங்களுக்கு தெரியும் ஒரு சிறிய சண்டையில் கூட நான் குருகுலத்து பையன்களோடு தோற்று விட்டேன். நான் எனது தன்னம்பிக்கையை இழந்துவிட்டேன்.
இளவரசே, நீங்கள் கூறுவது எனக்குப் புரிகிறது. ஆனால் அவ்வாறு நீங்கள் நினைக்கக் கூடாது. கேளுங்கள், என்னிடம் ஒரு மந்திர மூலிகை உள்ளது. இதனை உங்களது ஆயுதத்தில் பொருத்திக் கொண்டால் நீங்கள் வலிமை பெற்றுவிடுவீர்கள். இதனைப் பொருத்தியதால்தான் இந்த மாளிகையில் இருப்போரை உங்களால் வீழ்த்த முடிகிறது.
நான் உங்களை குருகுலத்திற்கு அனுப்பும் முன்னர் உங்களது ஆயுதத்திலிருந்து இந்த மூலிகையை எடுத்துவிட்டு என்னுடைய வாளில் பொருத்திக் கொண்டேன். ஏனென்றால் நான் போருக்குச் சென்றுகொண்டிருந்தேன்.


குருவே, என்னிடம் இந்த மூலிகை இருக்கும்போது நான் ஏன் எல்லாவற்றையும் கற்க வேண்டும்.
கவனமாகக் கேளுங்கள் இளவரசே, மூடநம்பிக்கையை சார்ந்திருப்பது சில சமயம் காலை வாரிவிடும். இதுபோல் என்னிடம் ஒரே ஒரு மூலிகைதான் உள்ளது. நான் உன்னிடம் இதனைக் கொடுக்க முடியும். ஆனால் ஒருவேளை இந்த மூலிகை தொலைந்துவிட்டால் நீ என்ன செய்வாய்?
எனவே மகனே, தன் திறமையை வளர்த்து கொள்வது எப்போதுமே நல்லது. மக்கள் தங்களது நல்வாழ்விற்காக உன்னைதான் சார்ந்தி ருப்பர். எனது அறிவுரையை ஏற்று மீண்டும் குருகுலத்திற்குச் செல். நீ எதையும் இழக்கத் தேவையில்லை.


இளவரசர் வீர வர்மன் மீண்டும் குருகுலத்திற்கு சென்று குரு சமீரிடம் இருந்து தீவிரமான பயிற்சியை எடுத்துக் கொண்டார். அவர் முழுமையான ஈடுபாட்டுடன் குருவிடமிருந்து அனைத்தையும் கற்றுக்கொண்டார். அவனது திறமை கண்டு அவனது நண்பர்களும் குருவும் வெகுவாகப் பாராட்டினர்
ராஜ்ஜியத்திற்கு திரும்பிவரும் வழியில் அவன் எதிரிகளால் தாக்கப்படுகிறான். அவன் வீரத்துடன் சண்டையிட்டு நாடு திரும்புகிறான்.
மகனே, நீ இப்போது இந்த மூலிகையை எடுத்துக்கொள். உனது ஆயுதத்தில் பொருத்திக்கொண்டால் உனக்கு பயம் ஏதும் இருக்காது.
குருவே, எனக்கு இனிமேல் மூலிகை வேண்டாம். நான் எனது திறமையிலேயே சண்டையிட்டுக் கொள்கிறேன். நீங்கள் வேறு யாருக்காவது இந்த மூலிகையைக் கொடுங்கள்.


ஓ... இல்லை .. இளவரசன் மூலிகையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, அவன் ஒரு முட்டாள். அவன் அறியாமலேயே அதனை அவனது வாளில் பொருத்திவிடுங்கள்.
அரசே, இந்த மூலிகைக்கு கட்டாயமாக மந்திர சக்தி இருக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரு மனிதனுக்கு,அவனது தன்னம்பிக்கையிலும் திறமையிலும் நம்பிக்கை இருக்கிறது என்று அர்த்தம்.
எதிர்காலத்தில் இளவரசருக்குப் பிறக்கும் மகனுக்கும் இந்த மூலிகையைப் பயன்படுத்தி சோதனை செய்யலாம்.
அந்த மூலிகை ஒரு சாதாரண ஒன்று என்பதை மன்னர் உணர்கிறார். இந்த முழு யோசனையுமே இளவரசரின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு குரு ப்ரசன்னா தீட்டியது. அதில் அவர் வெற்றி பெற்றுவிட்டார். மன்னர் அவரது புத்திசாலித்தனத்தை மெச்சி அவரை கௌரவப்படுத்தினார்.
முற்றிற்று


தீர்வு


பலராம் கிராமத்தில் பெரிதாக மதிக்கப்படும் ஒரு நபர்.
ஒரு நாள்...
பலராம் திடீரென்று அதிகமாக உண்ண ஆரம்பித்தார், மக்கள் அவர் இயல்பாக இல்லை என்று சந்தேகிக்கத் தொடங்கினர். ஒவ்வொரு நாளும் அவர் வலுக்கட்டாயமாக அவர்களின் வீட்டிற்குள் நுழைந்து அங்கிருக்கும் அனைத்து உணவுகளையும் சாப்பிடுவதை நினைத்து மக்கள் வெறுப்புற்றனர்.
பலராம் ஒரு பலம் வாய்ந்த மனிதர், கடந்த சில நாட்களில் அவரது பலம் பலமடங்கு அதிகரித்தது, மக்களால் அவரைத் தடுக்க முடியவில்லை.
அவர் அளவுக்கதிகமாக உண்பதை நினைத்து மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.


ஹூம்... ஃபட்....
ஜெய் ஹனுமான்.
ஹா...ஹா...
நான் ஹனுமான்.
ஓஓஓ.....
மக்கள் எல்லாவற்றையும் முயன்றும் அவர்கள்
இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை.
ஹரி ராம் அறிவாளியான
விவேகமுள்ள ஒரு விவசாயி.


பலராம் ஏன் இவ்வளவு அதிகமாக உண்கிறார் என்பதை ஹரி ராம் அறிந்து கொள்ள விரும்பினான், அவன் பலராம் பற்றிய அனைத்து தகவல்களையும் திரட்டினான்..
பலராமை சாதாரணமாக மாற்றுவது பற்றி ஹரிராம் சிந்தித்தான்.


எனக்கு இரண்டு ஏக்கர் நிலமும் 1000 பொற்காசுகளும் அளியுங்கள்; நான் பலராமின் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்துவிடுகிறேன்.
ஹரிராமால் பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனின் அவனுக்கு பணமும் நிலமும் அளிப்பது சிறந்ததே என்று அவர்கள் முடிவு செய்தனர்.
உன்னால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனொல் நாங்கள் உனக்கு நிலமும் பணமும் அளிப்பது என்று முடிவு செய்துள்ளோம்.
அவர்கள் அனைவரும் ஹரிராம் எவ்வாறு இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பான் என்பதை அறிந்துகொள்ள ஆர்வமாக இருந்தனர்.
ஒரு நாள்...
ஹே..... ஹனுமான் நான் இங்குதான் இருக்கிறேன். உனது விளையாட்டு முடிந்துவிட்டது.
யாரடா நீ? எனது பெயர் கூறி அழைப்பதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்?


நான்தான் சம்புநாதன், உனது மாமனார்.
அய்யோ கடவுளே
பலராம் இப்போது சாதாரணமான மனிதனாக மாறிவிட்டிருந்தார்.


இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்த்தாய்?
நினைவிருக்கிறதா.... மந்திரவாதி பலராமிடம் பேசும்போது அவர் தன்னை ஹனுமான் என்று கூறினார். நான்கு வருடங்களுக்கு முன்னர் நமது கிராமத்தில் ஹனுமான் என்ற ஒரு மனிதர் உண்டு. அவர் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டதன் காரணமாக நோய் பாதித்து அவதிப்பட்டிருந்தார்.
ஹனுமானின் மாமனார் ஒரு மருத்துவர். அவர்தான் ஹனுமானுக்குச் சிகிச்சை அளித்து அவனது உணவினைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்தார்.
ஹனுமானின் மாமனார் அவர் உணவு உண்பதைக் கண்காணித்து கட்டுப்படுத்தி வந்ததால் அவர் தனது மாமனாருக்கு மிகவும் பயப்படுவார். அவர் மிகவும் கண்டிப்புடன் இருந்தார். எப்போதுமே கொஞ்சம் கூட அளவு கூடுதலாகச் சாப்பிட அனுமதித்ததில்லை.
சிறிது வருடங்கள் கழித்து, ஹனுமான் இறந்துவிட்டார். ஆனால் அதிகம் உண்பது என்ற அவரது ஆசை நிறைவேறாமலேயே போய்விட்டிருந்தது.


ஹனுமானின் இறப்பிற்குப் பிறகு அவரது ஆவி பலராமின் உடலுக்குள் புகுந்துவிட்டது. அதுவே அவரை அதிகம் உண்ணச் செய்தது. நான்தான் அவரது மாமனார் என்று கூறியவுடன் பயந்துபோய் பலராமின் உடலில் இருந்து ஹனுமான் சென்றுவிட்டார்.


நன்றாகச் செய்தாய் ஹரிராம். நீ உண்மையிலேயே அறிவாளி மனிதன்தான்.
முற்றிற்று


மாயத் துடைப்பம்


லம்பு சம்பு என்ற  இரண்டு வேடர்கள் வேட்டையாடுவதற்காக காட்டிற்குச் சென்றனர்.
சில மணிநேரங்கள் கழித்து....
ஹூ...... எனக்கு சோர்வாக உள்ளது. நான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் நீ ஏன் ஒரு மானை வேட்டையாடிக்கொண்டு வரக்கூடாது.
சரி
சிறிது நேரம் கழித்து லம்பு வேகமாக ஓடி வந்தான்.
சம்பு, பார்.. எனக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று. மந்திர துடைப்பம்!
ஆஹா.. எங்கு கிடைத்தது?
நான் காட்டிலிருக்கும் ஒரு சூனியக்காரி குடிசையில் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் அவளிடமிருந்து திருடிவிட்டேன்.


நாம் இப்போது கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் "ஹம் ஃபட்" என்று கூறி எங்கு வேண்டுமானாலும் பறந்து செல்லலாம்.
ஆஹா லம்பு! அருமை.
உஷ்ஷ்! சத்தம்போடாதே, அந்த சூனியக்காரிக்கு கேட்டுவிடும்.
புர்ர்ர்ர்ர்ர்ர்.....


நீதான் எனது எஜமானியிடம் இருந்து மந்திர துடைப்பத்தைத் திருடியவனா.
வாயை மூடு முட்டாள் பூனையே. இன்னும் ஒரு வார்த்தைநீ பேசினால் உன்னைக் கொன்றுவிடுவேன்.
சம்பு, நான் இரவு உணவுக்காக மானை வேட்டையாடிக்கொண்டு வரும் வரை இந்தப் பூனையைப் பார்த்துக்கொள்.
"ஹம்ஃபட்"
எனது எஜமானி அவனைக் கண்டுபிடித்துவிட்டால், அவனை உயிருடன் சமைத்து சாப்பிட்டுவிடுவாள்.


ஆஹா! பறப்பது இவ்வளவு
வேடிக்கையாக இருக்கும் என்று நான்
ஒருபோதும் நினைத்துப் பார்க்கவில்லை.
அப்போது.. கீழே தரையில்
ஏ குண்டா... எனக்கு ஏதேனும்
மீன் கொண்டு வந்திருக்கிறாயா?
ஹே முட்டாள் பூனையே... என்னை
ஏன் குண்டா என்று கூப்பிடுகிறாய்?
தோலை உரித்துவிடுவேன்.
ஹி ஹி ஹி...
முதலில் நீ என்னை
பிடி பார்ப்போம்.
அதே சமயம் வானத்தில் லம்புவை
ஒரு காகம் தொந்தரவு செய்தது.
ஷூ ஷூ,
இங்கிருந்து
போ. அழுக்கு
காகமே.


கீழே, சூனியக்காரி துடைப்பத்தை தேடி அலைந்து கொண்டிருந்தாள்.
ஏ மனிதனே, நீதானே எனது துடைப்பத்தை திருடியது?
இல்லை அம்மா, நான் அப்பாவி. என்னை விட்டு விடு...
ஹி ஹி ஹி, என்னிடம் பொய் கூறாதே, உன்னை கொன்றுவிடுவேன்.
ம்ம்ம்... உண்மையிலேயே.. அவன் சுவையாகத்தான் இருப்பான்.
இல்லை.... கருணை காட்டுங்கள். லம்புதான் உங்கள் துடைப்பத்தைத் திருடினான்.
அப்போதுதான், லம்பு வானத்தில் பறப்பதை அவள் கண்டாள்.
ஏ முரடனே, எனது துடைப்பத்தைக் கொடுத்துவிடு.
அதன் பின் லம்பு துடைப்பத்தில் பறக்கத் தடுமாறினான்.
அய்யோ... எனக்கு வழுக்குகிறது... ஆஆ... எனக்கு உதவுங்கள்.


ஏ குண்டனே! நீ செல்லலாம். திருடிய உன் நண்பனை நான் பார்த்துக்கொள்கிறேன்.
நன்றி... அம்மா..
ஏ தீய சக்திகளே! "ஹம்ஃபட்" இந்த திருடனை கீழே கொண்டுவாருங்கள்.
ஆஆஆ...
ஆஆஆ.. உதவி. நான் இனி ஒரு போதும் திருட மாட்டேன். உதவுங்கள்...ஆஆ...
திருடர்கள் ஒருபோது வளமையாக வாழ்வதில்லை.
முற்றிற்று


மாபெரும் நதி


சோனாபூர் ராஜ்ஜியம் விவேகமுள்ள
மணிமதன் என்ற அரசனால் ஆளப்பட்டு வந்தது.


நாட்கள் சென்றது, மன்னர் மணிமதன் நோய்வாய்ப்பட்டு
மரணப்படுக்கையில் இருந்தார். அவர் தனது மகனை அழைத்து.
மகனே, எனது நேரம் நெருங்கிவிட்டது.
நீதான் எதிர்கால அரசர். நமது மக்களை
நன்கு கவனித்துக் கொள், பெரியவர்களை
மதித்து நட. கஷ்டமான நேரங்களில்
அமைச்சகத்தைத் தொடர்புகொள்.
விரைவில் மன்னர்
மணிமதன்
இறந்துபோனார்.


சித்திரசேனன் பதவிக்கு வந்ததும் அகந்தையுடன் நடந்துகொண்டான். பெரியவர்கள் அவனுக்கு ஆலோசனை கூற முயன்றபோது...
எனக்கு உங்களது ஆலோசனை இனி தேவையில்லை. இங்கிருந்து செல்லுங்கள்.
இந்த முதியவர்கள் நமது வளர்ச்சிக்கு பாரமாகவும் தொந்தரவாகவும் இருக்கின்றனர். நான் அவர்களை ஏதாவது செய்யவேண்டும்.


அடுத்தநாள் மன்னன் தனது மக்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினான்.
மன்னரின் ஆணையின்படி, 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மக்களும் இந்த ராஜ்ஜியத்திலிருந்து அகற்றப்படுவார்கள்.
நாட்கள் செல்லச் செல்ல, சோனாபூரின் புகழ் மங்கத் துவங்கியது.
மன்னா, கங்கை நதிக்கு அருகில் உள்ள காடுகளில் பல அழகான இடங்கள் உள்ளன. நீங்கள் அங்கு சென்று வருவது உங்களுக்கு அமைதியைத் தரலாம்.


சரி.
சித்திரசேனன் கங்கை ஆற்றின் கரைக்குச் சென்றான்.
அவன் கங்கைக்கு அருகில் இருக்கும் பிந்திராபூர் என்ற நகரத்தை அடைந்தான்.
என்ன அழகான நகரம்!! நாம் இதனைச் சுற்றிப் பார்க்கலாம்.


ஆஹா, இந்த நகரம் உண்மையிலேயே
அழகாகவும் வளமாகவும் இருக்கிறது...



மக்களே, உங்களது மன்னர் யார்? நான் அவரை சந்திக்க வேண்டும்.
மன்னா இந்த நகரத்தை யாரும் ஆட்சிசெய்யவில்லை, ஆனால் நான் உங்களை எனது தலைவரிடம் அழைத்துச் செல்கிறேன்.
வணக்கம் ஐயா, நான் சோனாபூரின் மன்னன் சித்திரசேனன்.
வணக்கம் சித்திரசேனரே.
ஐயா, உங்களது நகரம் மிக அழகாக உள்ளது.
மன்னா, ஒரு காலத்தில் எங்களது நகரம் வறுமையில் இருந்தது. ஆனால் இந்த நகரத்துப் பெரியவர்களின் உதவியுடன் நாங்கள் இதனைப் பிரம்மாண்ட நகரமாக மாற்றிவிட்டோம்.
வயதானவர்களால் என்ன செய்துவிட முடியும்? அவர்கள் ஒரு சுமை இல்லையா?
மன்னா, இந்த நதியைப் பார்த்தீர்களா. அது பிறந்த இடத்தில் ஓடையாக காட்சியளிக்கிறது.


ஆனால் அது கடலைச் சென்றடையும்போது, பல இடங்களில் இருந்து
நதிகள் வந்திணைந்து அது ஒரு மாபெரும் நதியாக மாறுகிறது.
இதேபோன்றுதான் வயது ஆகும்போது நமது அனுபவத்தின் மூலம் நாம்
ஞானத்தைப் பெறுகிறோம். நாம் நமது உடல்வலிமையை இழந்திருப்பினும்,
நமது அறிவு சிறந்த முறையில் பயன்படக்கூடியதாக இருக்கும்.
சித்திரசேனன் அவனது தவறை உணர்ந்து தலைவரிடம் விடைபெற்றுச் சென்றான்.
ராஜ்ஜியத்திற்குத் திரும்பியதும் அவன் அங்கிருந்து வெளியேற்றப்பட்ட
பெரியவர்களை அழைத்து அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, ராஜ்ஜியத்திற்கு
திரும்பி வருமாறு கேட்டுக் கொண்டான்.
முற்றிற்று.



**Buy Books & eBooks Online at www.indianvedicschool.com**

**INDIAN VEDIC SCHOOL PVT LTD.**
Plot No: 29B, Laxmi Nilayam, Road No: 8, Film Nagar,
Jubilee Hills, Hyderabad - 500096, Telangana, India.
info@indianvedicschool.com